தமிழ் நாடு சட்டப் பேரவை.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வெள்ளிக்கிழமை, 1971 சூலை 23

1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

Post of Director of Venereology

* 395 Q.—THIRU R. PONNAPPA NADAR:
THIRUMATHI JOTHI VENKATACHELLUM:

Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the post of Director of Venereology has been kept vacant:

(b) if so, the reasons therefor; and

(c) whether any appointment has since been made?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ), (இ) &(உ) 1—4—1970 அன்று சென்னை அரசினர் பொது மருத்துவமனை, மேகநோய் மருத்துவத்துறை இயக்குநர் பதவி காலியாகியது. இந்தத் துறையின் இயக்குநராக நியமிப்பதற்கென, மேகநோய் மருத்துவத் துறையைச் சேர்ந்த முதுநிலைப் பேராசிரியர் தகுந்தவரா என்பது குறித்து சென்னைப் பல்கலை கழகத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் இசைவு பெறும் வரையில், அப்பதவிக்குத் தற் காலிக அடிப்படையில் (temporary basis) மிகு முதுநிலை அதிகாரியை அப்பதவிக்கு நியமிப்பதற்கு 21—12—1970 அன்று அரசு ஆணைகளைப் பிறப்பித்தது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்பொழுது எல்லா ஆலோ, சனையையும் பெற்று, அந்தப் பதவிக்கு அவர் தகுதியானவர் என்று அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட டைரக்டர் பதவி வகிப்பதற்கு degree in M.D. in General Medicine or M.S. in General Surgery of any University or Institution recognized by the University Grants Commission for the purpose of grant.

என்று ஒரு விதி இருக்கிறது. இப்பொழுது அங்கே தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறவர் எம்.டி., எம்.எஸ். இவைகளில் ஏதாவது பொது வகையான பட்டங்களைப் பெருதவர். அவர் பெற்றிருக்கிற பட்டம் " டிப்ளமா " என்கிற வகையில் அதே துறையைச் சார்ந்தது. அவர் நீண்டகால அனுபவம் உள்ளவர். அதற்குமேல் ஒரு பட்டம் பெற வேண்டும் என்ற தகுதி அவசியமாக இருக்கிறதென்று பல்கலைக்

கழகத்தால் வற்புறுத்தப்பட்ட காரணத்தால், அந்தப் பட்டம் இல்லாமல் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்த காரணத்தால், அவர் இப்பொழுது பெற்றிருக்கும் பி.எச்.டி. பட்டம் அதற்கு ஏற்றதுதானா என்று அறிந்து கொள்வதற்காக நம்முடைய மருத்துவத் துறை இயக்குநர் அவர்கள் திரும்பவும் பல்கலைக்கழகத்திற்கு எழுதியுள்ளார்கள். அந்த அனுமதி வராமையினால் தீர்மானிக்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்போது இருக்கின்ற டாக்டர் அவர்கள் பெற்றிருக்கின்ற அந்த டிப்ளமாவானது, இப்பொழுது இருக்கின்ற வைஸ்-சான்ஸலருக்கு முன்பாக இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய வைஸ்-சான்ஸ்லர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களால் equivalent to any M.S. or M.D. post-graduate degree of the Madras University.
என்று ரிகக்னைஸ் செய்யப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் அவர்கள் பெற்றிருக்கின்ற இந்த எம்.பி.எச். டிப்ளமா குறித்து ஆலோசித்து அவர்களுக்கு இந்தப் பதவியை நிர்ணயம் செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த டைரக்டர் பதவி என்பது நம்முடைய சென்னை மருத்துவத் துறை மட்டும் நியமிக்கிற ஒரு பதவி அல்ல. இது வேறொரு வகையில் கிராண்ட் பெற வேண்டியது. அவர்கள் விதித்திருக்கும் அடிப்படையில்

M.D. or M.S. either in General Medicine or in General Surgery is the basis for recognition as Director "

என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தின் காரணமாக, பொது வகையான எம்.டி., எம்.எஸ். போஸ்ட்-கிராஜுவேட் டிக்ரி இல்லாததால், அதற்கான தனித் தகுதி அவருக்கு இருந்தாலும்கூட, அதை உடனடியாக ஒப்புக்கொள்வதற்குச் சில தடைகள் இருக்கின்றன.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM: Sir, are the Government aware that this post-graduate Degree was then recognised by the Madras University when this officer was posted as Reader by the previous Government? So, will the Hon. Minister be in a position to explain why this objection has been raised by the present Vice-Chancellor of the University? Is it not casting aspersion on the action of the previous Vice-Chancellor?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The position has been slightly misunderstood by the hon. Member. The condition that is required for recognition of a post-graduate degree in the said subject is not only sufficient to hold the post of Director of this particular department but there is also another condition that he should be qualified in the post-graduate degree of either M.S. or M.D. Because of that condition, the Department has enquired the University whether they will recognise the Ph.D. degree that is obtained by the Lady Doctor as equivalent to M.D. or M.S.

1971 ஜூலை 23]

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : The compulsory qualification of a post-graduate degree in General Surgery or General Medicine was considered before this doctor was appointed as a Reader. Are the Government aware of it?

THE HON. THIRU K. ANBAZHAGAN : This condition for the post of the Director in that particular Department has been there even earlier.

Legalisation of abortion

* 396 *Q.*—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to legalise abortion in this State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கருவைக் கலைக்கும் செயலை சட்டப்படி செல்லுபடியாக்கும் செயற்குறிப்பொன்று மைய அரசின் ஆய்விலுள்ளது. அதைப்போன்ற செயற்குறிப்பெதுவும் இம்மாநில அரசின் ஆய்விலில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று பல நாடுகளில், அபார்ஷன் சட்டபூர்வமாக்கப்பட்டு, அதற்கான வைத்திய வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்படுகிறதா? அப்படியானல் மத்திய அரசினுடைய கையைப் பலப்படுத்தும் முறையில் தமிழக அரசு ஒரு குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்புவதோடு, தேவைப்பட்டால் தமிழக அரசே ஒரு மசோதா கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கருச் சிதைவு குறித்து மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்கு மிக நன்ருக விஷயம் தெரிந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஓரளவு கரு வளர்ந்ததற்குப் பின்னல் கலைப்பது எப்படி என்பது பிரச்சினையே தவிர, கரு தொடங்குகிற நிலையில் தடுப்பதற்கும், கரு உண்டாகாமல் இருப்பதற்கும், உண்டாகிய கட்டத்திலேயே அது உருப்பெற்று விடாமல் இருப்பதற்கும் எவ்வளவோ ஏற்பாடுகள், குடும்பக் கட்டுப் பாடு முறைகளில் இருக்கின்றன. கருவைச் சிதைக்க வேண்டும் என்று சட்டம் வருமானல் அதற்குரிய சில அடிப்படைக் கருத்துக்களோடு இருப்பது நல்லது என்பது தமிழக அரசினுடைய எண்ணமாகும். ஆனல், மத்திய அரசு, நாட்டினுடைய பொது நிலைமையைக் கருதி அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவரு வார்களானல் தமிழகத்திலேயும் அது இயல்பாக இயங்கத் தொடங்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கருச் சிதைவு காரணமாகப் பெண்கள்தான் பாதிக்கப்படுவார்கள். பெண்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தினுடைய பொறுப்பு மட்டுமல்லாமல் ஆண்களுடைய பொறுப்புமாகும். ஆகையால், கருச் சிதைவைச் சட்டபூர்வமாக்கும் மசோதாவை மத்திய அரசு கொண்டுவர முன்வந்தால், அதைத் தமிழக அரசு ஒப்புக்கொள்ளாமல் இருப்பதற்கும், அத்தகைய சட்டம் கூடாது என்று மத்திய அரசை வற்புறுத்துவதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?